மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 227— திருமதி செ, சுந்தராம்பாள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்,

227—

மேட்டூர் நகரியத்தில் பட்டா இல்லாத வீடுகளுக்கு மின் இணைப்பு,

*260 திருமதி செ, சுந்தராம்பாள் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

மேட்டூர் தொகுதியில். மேட்டூர் நகரியத்தில் பட்டா இல்லாத வீடுகளுக்கு மின்சாரம் வழங்க தடை விதித்துள்ளதைத் தளர்த்தி மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே புறம்போக்கு மற்றும் அரசுத் துறைகளுக்குச் சொந்தமான நிலங்களில் கட்டியுள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் நேரத்தில் நடைமுறையிலுள்ள மின்சார வாரிய விதிகளின்படி சம்மந்தப்பட்ட அரசு அதிகாரிகளிடமிருந்து தடையில்லா சான்றிதழ் அதாவது No objection Certificate பெறப்பட வேண்டும். மேட்டூர் நகரியத்திற்கும் இதே விதிதான் கடைபிடிக்கப்படுகிறது,

முற்பகல் 10—10,

திருமதி செ, சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. மேட்டூர் நகரியத்தில் நூற்றுக்கு 75 பர்செண்ட் வீடுகள் பட்டா இல்லாமல் உள்ளன, மறைந்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியின்போது. பட்டா இல்லாத வீடுகளுக்கு N.O.C. வழங்கப்பட்டு. மின் இணைப்பு வழங்கப்பட்டது, கடந்த 3 ஆண்டுக்காலமாக மின்சார வாரியம் என்ன காரணத்தாலோ, அந்த உதவியை நிறுத்தி வைத்துள்ளது, தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில். என்.ஓ.சி.சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்டு, மீண்டும் பட்டா இல்லாத வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நகரியக் குழு எல்லையில் உள்ள பெரும்பாலான இடங்கள் பொதுப்பணித்துறை வருவாய்துறை மற்றும் நகரியக் குழுவிற்குச் சொந்தமான இடங்களாக இருக்கின்றன. மேட்டூர் நகரியக் குழு நிர்வாக அலுவலர்கள் வழங்கும் தடையில்லாச் சான்றிதழ் அடிப்படையில் மின் இணைப்பு வழங்க உத்தரவுகள் அளிக்க அரசின் ஆணை 22—3—1991 நாளிட்ட கடிதத்தில் அரசிடமிருந்து மின் வாரியத்திற்கு ஒரு கோரிக்கை வந்தது, என்.ஓ.சி. இல்லாவிட்டாலும்கூட இந்த மின் இணைப்பு வழங்கலாமா என்பதைப்பற்றி மின் வாரியத்திற்கு அரசிடமிருந்து ஒரு கோரிக்கை கேட்கப்பட்டது. அவ்வாறு அரசு உத்தரவிடுமானால் நாங்கள் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம் என்று மின்சார வாரியமும் அதற்கான பதிலைத் தந்தது. அதற்குப் பின்னால். 15—2—1991 அன்று அந்தக் கோரிக்கை கைவிடப்பட்டு, பழைய முறையிலே, அதாவது என்.ஓ.சி. பெற்றவர்களுக்குத் தான் மின் இணைப்பு வழங்கவேண்டும் என்று அரசு நம்முடைய அரசு வருவதற்கு முன்னாலே. நம்முடைய ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்னாலே 15—2—1991 தேதியன்று அரசு ஒரு கடிதத்தை மின்சார வாரியத்திற்கு அனுப்பி இருக்கிறது, அதன் காரணமாகத்தான் மின் இணைப்பு என்.ஓ.சி. இல்லாமல் வழங்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், இப்போது பெரும்பாலான இடங்களில் இப்படி நாம் மின் இணைப்பு கொடுக்கின்ற நேரத்தில் ஆக்கிரமிப்பு செய்கின்ற காரணத்தாலே, புறம்போக்கு இடங்களில் ஆக்கிரமிப்பு அதிகமாகின்ற காரணத்தாலே இது கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஒப்பற்ற தலைவியாகிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே பட்டா இல்லாத வீடுகளில் உள்ள படிக்கும் குழந்தைகள் மின்சாரம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், எனவே தாய் உள்ளம் கொண்ட நமது முதல்வர் அவர்கள் அவர்களது படிப்பை முன்நிறுத்தியாவது அத்தகைய வீடுகளுக்கு, பட்டா இல்லாத வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : தலைவர் அவர்களே. நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன், அந்த மாதிரி விதிகளைத் தளர்த்தி மின்சார வாரியத்திற்கு அனுப்பினால் மின்சார வாரியம் அந்த இடங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் தயக்கம் காட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 228. திருமதி மரியமுல் ஆசியா, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்,